**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கூடலூர்**

**முன்னிலை – திரு. ஆர். சசின் குமார்., பி.ஐ.எஸ்.எம்., பி.எல்., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்**

**(2055–திருவள்ளுவராண்டு, குரோதி வருடம், வைகாசி திங்கள் 8–ம் நாள்)**

**2024–ம் ஆண்டு மே திங்கள் 21–ம் நாள் செவ்வாய்கிழமை**

**STC.No. 641/2023**

**CNR.No. TNNS070014872023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு<br>காவல் உதவி ஆய்வாளர் மூலமாக<br>கூடலூர் காவல் நிலையம்,<br>நீலகிரி மாவட்டம்.<br>குற்ற எண். 335/2023. |
| குற்றம் சாட்டப்பட்டவர் | – | திரு. சிபு ஆண்டனி, வயது 23/2023,<br>த/பெ. திரு. ஜேசுராஜ்,<br>க.எண். 12/59 ஏ 3, காளம்புழா,<br>அத்திப்பள்ளி அஞ்சல், கூடலூர். |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 03.09.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 03.09.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | – | 03.09.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 03.09.2023 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 08.09.2023 |

R SASIN KUMAR Digitally signed by R SASIN KUMAR Date: 2024.05.21 18:27:43 +0530

<table>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு.281–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>27.10.2023</td></tr>
<tr><td>சாட்சிகள் விசாரணை செய்த நாட்கள்</td><td>–</td><td>
<table>
<tr><td>சாட்சி வரிசை எண்.</td><td>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>14.05.2024</td><td>14.05.2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>14.05.2024</td><td>14.05.2024</td></tr>
</table>
</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்</td><td>–</td><td>(1) கு.வி.மு.ச பிரிவு 311.ன் கீழ் Crl.M.P.No. 2011/2024 என மனுதாக்கல் செய்யப்பட்டு 14.05.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.313(1)(ஆ)– இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>17.05.2024</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விவரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>–</td><td>எதிரி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு. 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழான குற்றங்களுக்கு குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
</table>

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:27:58 +0530

| | | |
|---|---|---|
| முடிவு | – | இறுதியாக,<br>(i) எதிரி– சிபு ஆண்டனி Sec.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச பிரிவு 255(2).ன் கீழ் முடிவு செய்து பிரிவு.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழான குற்றத்திற்கு இந்நீதிமன்றம் களையும் வரை ஒரு நாள் மெய்க்காவல் சிறைதண்டனையும், ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) அபராதமும், மேற்படி அபராதத் தொகையை கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனையும் விதித்தும்,<br><br>(ii) இவ்வழக்கில் P.R.No.194/2023 இல் தாக்கல் செய்யப்பட்டு 50 கிராம் எடையுள்ள கஞ்சா அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதை Drug Disposal Committee West Zone–இல் மேல்முறையீட்டுக் காலத்திற்கு Rule 262 of Criminal Rules of Practice.ன் கீழ் புலனாய்வு முகமைக்கு ஒப்படைத்து அதுகுறித்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென்றும், மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:05 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் குற்றம் புலன் கொள்ளப்பட்டு, 08.09.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த உதவி அரசு வழக்கறிஞர் நிலை–1, திருமதி. C. ஜோதிமணி, B.A., B.L., அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.B.விபின், அவர்கள் முன்னிலையாகி இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக கடந்த 17.05.2024 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) குற்றமுறையீட்டாளர் தரப்பில், கடந்த 03.09.2023 அன்று 20.00 மணியளவில் கூடலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கூடலூர் காளம்புழா ஜங்சன் அருகில் எதிரி சிபு ஆண்டனி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 50 கிராம் எடை கொண்ட கஞ்சாவை சட்டவிரோதமாக தன்வசம் வைத்திருந்தார் என்ற எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எனவும் கு.வி.மு.ச பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:12 +0530

**2) குற்றம் புலன் கொள்ளல்:-**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act-ன் கீழான குற்றங்கள் இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b)-ன் கீழ் புலன் கொள்ளப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக எதிரிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாக கு.வி.மு.ச. பிரிவு 204(1)(a)-ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது.

**3) எதிரிக்கு நகல் வழங்கல் மற்றும் முதல் நிலை விசாரணை:-**

அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு.207-ன் கீழ் எவ்வித தாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு வழக்காவண நகல்கள் வழங்கப்பட்ட பின் போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 281.ன் கீழ் வழக்கு சாராம்சங்கள் குறித்தும் விளக்கி வினவ கேட்டதில் எதிரி குற்றவாளி இல்லையென மறுத்துரைத்தார்.

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:19 +0530

**4) குற்றசாரம்சம் வனைதல்:-**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் எதிரி குற்றம் புரிந்ததற்கான போதிய முகாந்திரங்கள் உள்ளதாக தோன்றியதால் எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act.ன் கீழான குற்றங்களுக்கும் கு.வி.மு.ச. பிரிவு 252-ன் கீழ் குற்றசாரம்சம் வனையப்பட்டு எதிரி மீதான குற்றசாரம்சங்கள் எதிரிக்கு வாசித்து காண்பித்து விளக்கி வினவி கேட்கப்பட்டது.

**5) எதிரியின் வாதம்:-**

எதிரியிடம் மேற்கண்டபடி குற்றச்சாட்டு வனைந்து வினவி கேட்கப்பட்டதில் எதிரி தான் **"குற்றவாளி இல்லை"** என தன் மீதான குற்றச்சாட்டுகளை பொய் என மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன.

6) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அ.சா.பொ.1 சான்று பொருள்

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:28 +0530

குறியீடு செய்யப்பட்டன. பின்னிட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டன.

7) **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சாரம்சம் பின்வருமாறு:–</u>**

7.1) அ.சா.1 – திரு. முத்துமுருகன், நியூஹோப் காவல் நிலைய காவலர் ஆவார். அ.சா.2 திரு. பவுலோஸ், கூடலூர் காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.2 சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கில் அனுமதி பெற்று கூடுதலாக சேர்க்கப்பட்ட சாட்சி ஆவார். அ.சா.2–ற்கு கோப்புகள் மற்றும் வழக்கு நிலைய நாட்குறிப்பு அடிப்படையில் வழக்கு விவரங்கள் நன்கு தெரிந்துள்ளது.

7.2) கடந்த 03.09.2023 அன்று அ.சா.1 கூடலூர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது அன்றையதினம் அ.சா.1, காவலர் அசோக்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் கபில்தேவ் ஆகியோர்கள் போதை பொருளான கஞ்சா, மதுவிலக்கு, லாட்டரி மற்றும் சூதாட்டம் ஆகிய குற்றங்களை தடுக்கும் பொருட்டு கூடலூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட சுங்கம், செவிடிப்பேட்டை ஆகிய பகுதிகளில் கண்காணித்து வந்தபோது கூடலூர் காளம்புழா ஜங்சன் அருகில் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த எதிரி ஓட முயற்சித்தபோது எதிரியை பிடித்தபோது எதிரி மீது கஞ்சா வாடை வீசியுள்ளது. உதவி



R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:34 +0530

ஆய்வாளர் கபில்தேவ் எதிரியிடம் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி அல்லது நீதித்துறை நடுவர் முன்பாக சோதனை செய்ய வேண்டுமா என கேட்டதற்கு எதிரி உதவி ஆய்வாளர் கபில்தேவ் அவர்களை சோதனை செய்ய எழுத்து மூலமாக அ.சா.ஆ.1 சோதனை விருப்ப கடிதம் கொடுத்துள்ளார். எதிரியை சோதனை செய்தபோது அவருடைய பேண்ட் பாக்கெட்டில் பழைய செய்தித்தாளில் சுற்றி வைத்திருந்த ஒரு பொட்டலத்தில் அ.சா.பொ.1 – 50 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்துள்ளது. அதனை தொடர்ந்து உதவி ஆய்வாளர் கபில்தேவ் அன்றைய தினம் 20.30 மணியளவில் எதிரியை கைது செய்து அ.சா.பொ.1 கஞ்சா போதை பொருளை அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 படிவம்–91 மூலம் சாட்சிகளான அ.சா.1 மற்றும் காவலர் அசோக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். பின்னிட்டு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் கபில்தேவ் கூடலூர் காவல் நிலைய குற்ற எண். 335/2023 என தாமாக அன்றையதினம் 21.00 மணியளவில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

7.3) தொடர்ச்சியாக விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் கபில்தேவ் அவர்கள் சாட்சிகள் அசோக்குமார் மற்றும் முத்துமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். கைது செய்யப்பட்ட எதிரியை தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். வழக்கு

R SASIN KUMAR Digitally signed by R SASIN KUMAR Date: 2024.05.21 18:28:40 +0530

சொத்தான சுமார் அ.சா.பொ.1 – 50 கிராம் எடையுள்ள கஞ்சாவை அ.சா.ஆ.4 படிவம் – 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து P.R.No.194/2023 பெற்றுள்ளார். தொடர்ச்சியாக புலன் விசாரணை முடித்து உதவி ஆய்வாளர் கபில்தேவ் அவர்கள் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

**8) எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)–ன் கீழ் வினவல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1. மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் விளக்கி வினவிய போது அதனை எதிரி மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தொடர்ச்சியாக எதிரி தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்டது.

9) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.சாட்சிகளும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

10) **தீர்வுக்குரிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையானது, எதிரி மீதான 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசு**

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:46 +0530

**தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

11. அரசு தரப்பு கற்றறிந்த உதவி அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்கள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலமும், அ.சா.பொ.1 சான்று பொருள் மூலமும் எதிரியின் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கு சட்டப்படியான அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டியும் வாதிட்டார்.

12. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் NDPS சிறப்பு சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றம் மட்டுமே அது சம்மந்தமான வழக்குகளை விசாரணை செய்ய ஆள்வரை உள்ளது என்றும் NDPS சட்டம் பிரிவு 50–ற்கான நடைமுறைகள் தக்க முறையில் பின்பற்றப்படவில்லை என்றும், போலீசார் தவிர்த்து வெளி நபர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்து கஞ்சா பொருள் இல்லையென்றும் அத்தகைய தடய சொத்தை பகுப்பாய்விற்கு அனுப்பாதது வழக்கை பாதிக்க கூடியது என்றும், விசாரணை அதிகாரி வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதிய சாட்சிகள்

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:53 +0530

மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

**13) தீர்வு – 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் கீழான குற்றம்**

13.1) எதிரி மீது கடந்த 03.09.2023 அன்று 20.00 மணியளவில் கூடலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கூடலூர் காளம்புழா ஜங்சன் அருகில் எதிரி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 50 கிராம் எடை கொண்ட கஞ்சாவை சட்டவிரோதமாக தன்வசம் வைத்திருந்தார் என்ற எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–ன் கீழ் குற்றசாரம்சம் வனையப்பட்டுள்ளது.

13.2) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1.ன் சாட்சியம் மூலம் 03.09.2023 அன்று கண்காணிப்பு பணியின்போது கூடலூர் காளம்புழா ஜங்சன் அருகில் எதிரி இருந்தார் என்றும், எதிரியிடமிருந்து எழுத்துமூலமாக அனுமதி பெற்று அதன்பின்பு எதிரியை சோதனை செய்து அவரிடமிருந்து அ.சா.பொ.1–50 கிராம் எடையுள்ள கஞ்சாவை அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் மூலமும், அ.சா.ஆ.4 படிவம் – 91 மூலமும் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் அ.சா.1 னின் தடய சொத்துக்கள் கைப்பற்றுகை மற்றும் சம்பவ இடத்தில் எதிரியின் இருப்பு ஆகிய நிகழ்மைகள்

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:28:59 +0530

தொடர்பான சாட்சியத்தை அப்புறப்படுத்த போதிய முரண்பாடுகள் முன்னிறுத்தப்படவில்லை. மாறாக எதிரி தரப்பில் அ.சா.1 சாட்சியத்தை மட்டுமே அறுதியான சாட்சியம் என ஏற்றுக்கொள்ள இயலாது எனும் வாதத்தை பொறுத்த வரை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.134–ல் "No particular number of witness shall in any case be required for the proof of any fact." எனும் வரையறையானது சாட்சிகள் எண்ணிக்கை அடிப்படையில் அல்லாது அதன் வலிமையின் அடிப்படையில் தீர்மானித்தல் வேண்டுமென சொல்லப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கை அணுகும்போது அ.சா.1–ன் சாட்சியம் போதிய அரசு தரப்பு வழக்கு சங்கதிகளை முரண்பாடுகள் இன்றி வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. எனவே அ.சா.1 ன் சாட்சியம் ஒரே நபர் சாட்சியம் என்று அப்புறப்படுத்த முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.3) மேலும் எதிரி தரப்பு வாதமான வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை விசாரிக்காததால் அரசு தரப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்னும் வாதத்தை பொறுத்தவரை ***<u>Gopi -vs- State Rep by Inspector of Police Thitacheri police station, Nagapattinam District dated 24.07.2012</u>*** *Our Honble High court held that “In our view, in this case also non-examination of the Investigating Officer has caused no prejudice at all. All that Mr. Mishra could submit was that the examination of the Investigating Officer would have shown that the occurrence had taken place not in the courtyard but outside on the road. The Investigating Officer was not an eye witness. The body had already been*



R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:29:05 +0530

*removed by the Appellants. The Investigating Officer, therefore, could not have given any evidence as to the actual place of occurrence. There were witnesses who have given credible and believable evidence as to the place of occurrence. Their evidence cannot be discarded merely because the Investigating Officer was not examined. The non-examination of the Investigating Officer has not led to any prejudice to the Appellants. We, therefore, see no substance in this submission."* என புலன் விசாரணை அதிகாரியை விசாரிக்காததால் மட்டுமே அரசு தரப்பின் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் நம்பக தன்மையற்றது என முடிவு காண இயலாது என வகுத்துள்ள நெறிமுறை இந்த வழக்கிற்கும் பொருந்துவதாக உள்ளது. எனவே விசாரணை அதிகாரியை விசாரிக்காத காரணத்திற்காக மட்டும் அரசு தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.4) மேலும் எதிரி தரப்பு வாதமான இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்னும் வாதத்தை பொறுத்தவரை ***Narcotic Drugs and Psychotropic Substances Act Section 36-A(a)***-ல் *“All offences under this Act which are punishable with imprisonment for a term of more than three years shall be triable only by the Special Court constituted for the area in which the offence has been committed or where there are more Special Courts than one for such area, by such one of them as may be specified in this behalf by the Government.“* என 3 ஆண்டுகளுக்கு மேற்படாத தண்டனை உள்ள குற்றங்களை தக்க ஆள்வரை நீதிமன்றம் விசாரிக்கத்தக்கது என

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:29:11 +0530

கண்டுள்ளது. இவ்வழக்கில் எதிரி மீதான 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act குற்றமானது ஒரு வருடங்கள் வரை நீட்டிக்கத்தக்க குற்றம் என்பதால் ஆள்வரை நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க ஆள்வரை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

13.5) மேலும் எதிரி தரப்பில் பிரிவு.50 NDPS Act–ன் கீழ் நபர்களை சோதனையிட நடுவர் அல்லது பதிவு பெற்ற அலுவலர் முன்னதாக சோதனை செய்ய வேண்டும் என்னும் எதிரி தரப்பு வாதத்தை பொறுத்தவரை பிரிவு. 50(5) NDPS Act ஆனது அத்தகைய நடுவர் அல்லது பதிவு பெற்ற அலுவலர் இல்லாதபட்சத்தில் கு.வி.மு.ச நடைமுறைகளை பின்பற்றி சோதனை செய்யலாம் என விதிவிலக்கு உட்பிரிவு உள்ளதால் எழுத்து மூலமாக எதிரியின் சம்மதம் பெற்று அ.சா.பொ.2 கைப்பற்றுதல் செய்யப்பட்டுள்ளது பிரிவு.50.ன் கீழான நடைமுறை மீறுகை ஆகாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.6) அடுத்ததாக எதிரி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வாதமான அ.சா.பொ.1 தடய சொத்தானது கஞ்சா என நிரூபிக்க அரசு தரப்பில் அதனை பகுப்பாய்வுக்கு அனுப்பப்படவில்லை எனும் வாதத்தை பொறுத்தவரை அ.சா.1 கண்ணுற்ற மற்றும் சம்பவ இட சாட்சி ஆனது சாட்சியத்தில் எதிரி அவரது வசம் ஒரு பொட்டலம் வைத்திருந்தார் என்றும் அதனை புலன்விசாரணை அதிகாரி கைப்பற்றினார் என்பது குறித்தும்

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:29:32 +0530

போதுமான அளவு சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கையில் எதிரி அவரது வசம் என்ன பொருளை பொட்டலமாக வைத்திருந்தார் என்றும் சங்கதி எதிரிக்கே தெரியும் என்பதால் அத்தகைய கைப்பற்றப்பட்ட பொட்டலத்தில் உள்ள பொருளானது கஞ்சா அல்லாது வேறு பொருள் என நிரூபிக்கும் பொறுப்பு இந்திய சாட்சிய சட்டம் 106.ல் கண்டுள்ளபடி *Burden of proving fact especially with in knowledge:* *when any fact is especially within the knowledge of any person, the burden of proving that fact is upon him* என அத்தகைய நிரூபிக்கும் பொறுப்பு எதிரியையே சாரும். இந்த வழக்கில் அவ்வாறு அ.சா.ஆ 2.ல் உள்ள கைப்பற்றுகையானது கஞ்சா அல்லாது வேறு பொருள் என எதிரி அவரது கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)–ன் கீழான விசாரணையில் மறுத்து சொல்லவில்லை அதற்காக சாட்சியமும் முன்னிறுத்தவில்லை. ஆகையால் அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட பொருளானது அ.சா.பொ.1 கஞ்சா என நிரூபிக்க அரசு தரப்பில் போதிய சாட்சியங்கள் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் அ.சா.பொ.1 கஞ்சா பொருளானது தடை செய்யப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பொருளாக இருப்பதால் அதனை எதிரி தம் வசம் கையிருப்பில் வைத்திருந்துள்ளது. அ.சா.1 சாட்சியம் மூலம் போதுமான அளவு நிரூபிக்கப்பட்டுள்ளதால் NDPS Act பிரிவு 54–ன் கீழான அனுமானமானது எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாகவே அமைந்துள்ளது. அத்தகைய அனுமானமும் எதிரி தரப்பில் போதுமான அளவு அப்புறப்படுத்தப்படவில்லை.

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:29:39 +0530

13.7) மேற்கண்ட விவாதங்கள் மற்றும் காரணங்கள் அடிப்படையில் எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act குற்றத்தின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

14) இவ்வழக்கில் எதிரி குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்ததால் எதிரி பிரிவு.360–இன் கீழ் குற்றவாளி கண்காணிப்பு மற்றும் நன்னடத்தையின் கீழ் பலன் பெற உரிமை உள்ளதா என இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில் எதிரி மீது சட்டப்பிரிவு. 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதால் இந்நீதிமன்றம் NDPS Act Sec.33 பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது.

Sec.33 of NDPS Act :***- Application of Section.360 of the code of Criminal Procedure, 1973 and of the probation of Offenders Act, 1958*** *– Nothing contained in section 360 of the Code of Criminal Procedure, 1973 (2 of 1974) or in the Probation of Offenders Act, 1958 (20 of 1958) shall apply to a person convicted of an offence under this Act unless such person is under eighteen years of age or that the offence for which such person is convicted is punishable under section 26 or section 27.*

15) பிரிவு.33–இன் அடிப்படையில் கு.வி.மு.ச சட்டம் 360 மற்றும் குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம் 1958–இன் கீழ் பயனை குற்றவாளி பெறவேண்டுமென்றால் 18 வயதுக்கு குறைவானவராகவும் மற்றும் NDPS Act–இன் 26 அல்லது 27 பிரிவுகளின் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றமாக

இருக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி சிபு ஆண்டனியின் வயது 23 என்பதாலும், எதிரி மீது சட்டப்பிரிவு. 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –இன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் எதிரி கு.வி.மு.ச.360 மற்றும் Probation of Offenders Act Sec.6–இன் பயனை பெற உரிமை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அதேசமயம் இவ்வழக்கில் எதிரி மீது முன் தண்டனை எதுவும் நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனையே வழங்குவது நீதியின் பொருட்டு நியாயமானது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**16) இறுதியாக,**

**(i) எதிரி– சிபு ஆண்டனி Sec.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச பிரிவு 255(2).ன் கீழ் முடிவு செய்து பிரிவு.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழான குற்றத்திற்கு இந்நீதிமன்றம் களையும் வரை ஒரு நாள் மெய்க்காவல் சிறைதண்டனையும், ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) அபராதமும், மேற்படி அபராதத் தொகையை கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனையும் விதித்தும்,**

**(ii) இவ்வழக்கில் P.R.No.194/2023 இல் தாக்கல் செய்யப்பட்டு 50 கிராம் எடையுள்ள கஞ்சா அ.சா.பொ.1 ஆக குறியீடு**

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:29:51 +0530

**செய்யப்பட்டுள்ளதை Drug Disposal Committee West Zone—இல் மேல்முறையீட்டுக் காலத்திற்கு Rule 262 of Criminal Rules of Practice.ன் கீழ் புலனாய்வு முகமைக்கு ஒப்படைத்து அதுகுறித்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென்றும், மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024.ம் வருடம், மே மாதம் 21.ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R SASIN KUMAR Digitally signed by R SASIN KUMAR Date: 2024.05.21 18:29:57 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| **வ.எண்** | **சாட்சிகள் விபரம்** |
|---|---|
| அ.சா.1 | திரு. முத்துமுருகன் – காவலர் |
| அ.சா. 2 | திரு. பவுலோஸ் – உதவி ஆய்வாளர் |

R SASIN KUMAR Digitally signed by R SASIN KUMAR Date: 2024.05.21 18:30:01 +0530

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.09.2023 | சோதனை விருப்ப கடிதம் (அ.சா. 1 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.2 | 03.09.2023 | கைப்பற்றுதல் மகஜர் (அ.சா. 1 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.3 | 03.09.2023 | முதல் தகவல் அறிக்கை (அ.சா.2 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.4 | 03.09.2023 | படிவம் - 91 (அ.சா.2 மூலம் குறியிடப்பட்டது) |

**எதிரி தரப்பு சாட்சி:**
இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :**
இல்லை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**

| வரிசை எண். | சான்று பொருட்கள் |
|---|---|
| அ.சா. பொ.1. | சுமார் 50 கிராம் எடையுள்ள கஞ்சா (அ.சா.1 மூலம் குறியிடப்பட்டது) |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:**
இல்லை

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:30:07 +0530

**குறிப்புகள்:**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நிலைய பிணையில் இருந்தார்.
2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
4. கு.வி.மு.ச பிரிவு 363(1)-ன் கீழ் தண்டனை தீர்ப்புரையின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டது.
5. எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 437A–Judicial Form.No.75–ன் கீழ் சொந்த பிணைய பத்திரம் பெறப்பட்டது.

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:30:14 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**ANNEXURE**
**STATEMENT OF PARTICUALRS AS PER RULE 106 OF CRIMINAL RULES OF PRACTICE:-**

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | Accused No.1 |
| 2. | Name of Police station and the Crime Number of the Offence | The Sub-Inspector of Police,<br>Gudalur Police Station.<br>Crime No. 335/2023.<br>U/s 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act. |
| 3. | Name of Accused | Mr. Shibu Antony |
| 4. | Father's name of Accused | Mr. Jesuraj |
| 5. | Occupation of Accused | Coolie |
| 6. | Residence of Accused | D.No. 12/59A3, Kalampuzha, Athipalli Post, Gudalur. |
| 7. | Age of Accused | 23/2023 |
| 8. | Date of Occurence | 03.09.2023 |
| 9. | Date of Complaint | 03.09.2023 |
| 10. | Date of Apprehension | 03.09.2023 |
| 11. | Date of Release on bail | 03.09.2023 |
| 12. | Date of Commitment | Not applied |
| 13. | Date of Commencement of Trial | 27.10.2023 |
| 14. | Date of Closure of Trial | 17.05.2024 |
| 15. | Date of Sentence or Order | 21.05.2024 |
| 16. | Date of Service of copy of judgment or finding on accused | 21.05.2024 |
| 17. | Explanation of Delay | Nil |

R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:30:28 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**STC.No.641/2023**

**Judicial Form No.61**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR**
**JUDGMENT IN S.T.C. NO.641 OF 2023 ON THE FILE OF THE MAGISTRATE OF GUDALUR.**
**PRESENT: THIRU. R. SASIN KUMAR, BISM., B.L.,**
**Principal District Munsif-cum-Judicial Magistrate, Gudalur.**
**(Thiruvalluvar Aandu 2055, Kurothi Varudam, Vaigasi Thingal 8th Day)**
**Tuesday, Dated: 21st day of May' 2024**

| | | |
|---|---|---|
| Complainant | : | The Sub-Inspector of Police, Gudalur Police Station. |
| Accused | : | Mr. Shibu Antony |
| Offence | : | Under Section 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act. |
| Finding | : | Accused is found guilty for the charges under Section 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act. |
| Sentence | : | |

இறுதியாக,

(i) எதிரி–சிபு ஆண்டனி Sec.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச பிரிவு 255(2).ன் கீழ் முடிவு செய்து பிரிவு.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழான குற்றத்திற்கு இந்நீதிமன்றம் களையும் வரை ஒரு நாள் மெய்க்காவல் சிறைதண்டனையும், ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) அபராதமும், மேற்படி அபராதத் தொகையை கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனையும் விதித்தும்,

(ii) இவ்வழக்கில் P.R.No. 194/2023–இல் தாக்கல் செய்யப்பட்டு 50 கிராம் எடையுள்ள கஞ்சா அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதை Drug Disposal Committee West Zone–இல் மேல்முறையீட்டுக் காலத்திற்கு Rule 262 of Criminal Rules of Practice.ன் கீழ் புலனாய்வு முகமைக்கு



R SASIN KUMAR
Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:30:45 +0530

ஒப்படைத்து அதுகுறித்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென்றும், மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

| Serial Number | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father's Name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | Mr. Shibu Antony | Mr.Jesuraj | Christian | Coolie | D.No. 12/59A3, Kalampuzha, Athipalli Post, Gudalur. | 23/2023 |

| Date of | | | | | | | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commencement of trial | Close of trial | Sentence or Order | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 03.09.2024 | 03.09.2024 | 03.09.2024 | 03.09.2024 | 27.10.2023 | 17.05.2024 | 21.05.2024 | Nil |

R SASIN KUMAR

Digitally signed by R SASIN KUMAR
Date: 2024.05.21 18:30:54 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**